★ 'ஜரிஸ் மோனு' பயணிகள் நாளை யாழ். வருகின்றனர்

(யாழ்ப்பாணம்)

'ஜரிஸ் மோனு' கப்பலில் பிரயாணம்செய்து, தற்போது விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் உள்ள பிரயாணிகள் அனைவரும் நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் கொண்டுவரப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் கூட்டிவரப்பட்ட பின்னர், அவர்களைச் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சியை விடுதலைப் புலிகள் மேற்கொள்வர் என விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை கப்பல் பயணிகளை விடுவிப்பது தொடர்பாகச் சிறிலங்கா அரசாங்கத்துடன் பேசவேண்டிய அவசியம் இல்லை எனவும், அவர்கள் கூடியவிரைவில் விடுவிக்கப்படுவார்கள் எனவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. வே-சி

விலை ரூபா 6-00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 20 இதழ் 213
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 05 - 09 - 1995

## ஜரிஸ் மோனுவின் இரு மாலுமிகளை புலிகள் சுட்டுக்கொன்றனராம்

(கொழும்பு)

''ஜரிஸ் மோனு'' கப்பலின் மாலுமிகள் இரண்டுபேரை விடுதலைப்புலிகள் சுட்டுக்கொன்றுவிட்டதாக இலங்கை வானொலி தெரிவித்துள்ளது.

கடந்த 28ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் முல்லைத்தீவு கடலில் தரித்து நிற்கும் இக்கப்பலில் 8 மாலுமிகள் இருந்ததாகவும் இவர்களில் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் இலங்கை வானொலி அறிவித்தது.

(6ம் பக்கம் பார்க்க)

★ இராணுவ முகாமுடன் கூடிய

# பலாலி விமானத் தளத்தின் மீது புலிகள் மோட்டார் தாக்குதல்

## இரு படையினர் பலி; 16பேர் படுகாயம்

(கொழும்பு)

பலாலி விமானத் தளம் மீதும், இராணுவ முகாம் மீதும் விடுதலைப் புலிகள் நேற்று நடாத்திய மோட்டார் குண்டுத் தாக்குதலில் இரு படையினர் பலியானதுடன் 16 படையினர் படுகாயமடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

ஐந்து கிலோமீட்டர் தூரம் பாயக்கூடிய 81 மில்லிமீட்டர் மோட்டார் குண்டுகளினால் விடுதலைப் புலிகள் பலாலி முகாம் மீது தாக்குதலை நடாத்தினார்கள். இக் குண்டுகள் பலாலி விமான ஓடுபாதைக்கு அருகில் விழுந்து வெடித்துள்ளன. எனினும் விமான ஓடுபாதைக்கோ அல்லது அங்கு நிறுத்தப்பட்டிருந்த ஹெலிகளுக்கோ எதுவித சேதமும் ஏற்படவில்லை. இத்தாக்குதலினால்

(6ம் பக்கம் பார்க்க)

## பலாலி ஷெல்லுக்கு நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் நேற்று பிற்பகல் 1 30 மணியளவில் வலி வடக்கு பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

சுமார் அரை மணி நேரமாக இராணுவத்தினர் இந்த ஷெல் தாக்குதலை மக்களின் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி மேற்கொண்டனர்.

(6ம் பக்கம் பார்க்க)

★ கடற் கரும்புலிகள் சாதனை

## புல்மோட்டை கடற்பரப்பில் 'டோரா படகு' மூழ்கடிப்பு

### படகில் வந்த படையினரும் பலி

(திருமலை)

திருமலை - புல்மோட்டை கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினமிரவு கடற் கரும் புலிகள் நடாத்திய தாக்குதலில் 'டோரா' பீரங்கிப்படகொன்று தகர்த்துமூழ்கடிக்கப்பட்டதுடன் அதில் வந்தகடற் படையினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலை நடாத்திய இரு கடற் கரும்புலிகளும் வீரச்சாவை தழுவிக்கொண்டனர்.

(5ம் பக்கம் பார்க்க)

## அதிரடிப் படைத் தளபதி சி. ஐ. டி. விசாரணையில்

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பிரதம தளபதியும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான லயனல் குணசேகரா நேற்று சி. ஐ. டி. பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள விசேட அதிரடிப் படையின் தலைமைச் செயலகத்தில் வைத்துச் சித

(2ம் பக்கம் பார்க்க)

## ஹெந்தல பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(கொழும்பு)

கொழும்புக்கு அண்மையிலுள்ள ஹெந்தல பகுதியில்இனந்தெரியாத ஆணின் உருக்குலைந்த சடலமொன்று அழுகிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக வாவிகளிலும், ஆறுகளிலும் மிதந்த சடலங்கள்

(5ம் பக்கம் பார்க்க)

## கப்பலை நகர்த்த புலிகள் முற்பட்டால் அது உடனடியாக அழிக்கப்படும்!

### அமைச்சர் ரத்வத்தை அறிவிப்பு

(கொழும்பு)

''ஜரிஸ் மோனு கப்பல் தற்போது தரித்து நிற்கும் இடத்திலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுமதியின்றி விடுதலைப் புலிகள் நகர்த்த முற்பட்டால், அக்கப்பல் உடனடியாக அழித்தொழிக்கப்படும்''

இவ்வாறு பிரதிபாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார். அமைச்சர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில்:

'ஜரிஸ்மோனு' கப்பல் விவகாரம் பற்றி அரசாங்கம், விடுதலைப்புலிகளுடன் எந்த வித பேச்சுக்களையும் நடாத்த மாட்டாது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாகவே பேச்சுக்கள் நடைபெறுகின்றது. இக்கப்பல் தற்போது முல்லைத்தீவுக் கடற்பரப்பில் தரித்து நிற்கின்றது. இக்கப்பலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுமதியின்றி விடுதலைப் புலிகள் நகர்த்த முற்பட்டால், அது உடனடியாக அழிக்கப்படும்.

(5ம் பக்கம் பார்க்க)

## பயிலுநர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படுவர்

(கொழும்பு)

''மாகாண சபைகளின் கீழ் தற்போது பணி புரியும் பயிலுநர் ஆசிரியர்கள், விரைவில் நிரந்தரமாக்கப்பட்டு நிரந்தரச் சம்பளத்தைப் பெறுவார்கள்'' என்று கல்வி,

(5ம் பக்கம் பார்க்க)

## மருதானையில் நேற்றிரவு குண்டுவெடிப்பு ரயில் தண்டவாளம் சிதறியது

(கொழும்பு)

கொழும்பு மருதானைப் பகுதியில் நேற்றிரவு குண்டொன்று வெடித்ததில் ஒருவர் காயமடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

### ஒருவர்காயமடைந்தார்

மருதானை ஒறுகொடவத்தையில் ரயில் தண்டவாளத்தில் நேற்று இரவு 7-30 மணியளவில் இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

(2ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ரி. வி, றேடியோ உதிரிப்பாகங்கள்

சகலவிதமான T. V., Radio அவற்றின் I C., அவற்றின் உதிரிப்பாகங்கள், அன்ரனு, பூஸ்ரர் மற்றும் உதிரிப்பாகங்கள், பலவித கல்குலேற்றர், பற்றறிகள், வீடியோ, ஓடியோ கசற் வகைகளையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்: அன்ரனு பொருத்திக் கொடுக்கப்படும். புதிய நகர பல்பொருள் வணிக நிலையம் (நியூ சிற்றி றேடர்ஸ்) 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(ஏ-5524)


## ஆஸ்பத்திரி இயங்குகிறது

(கொழும்புத்துறை)

தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகம் அண்மையில் வலிமேற்கில் இடம்பெற்ற 'ட்ரகன் பயர்' இராணுவ நடவடிக்கையின் பின் அதே இடத்தில் மீண்டும் வைத்திய சேவையை ஆரம்பித்துள்ளது.

இங்கு தினசரி பல நோயாளர்கள் வருகை தந்து நோய்க்குச் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். இவ் வைத்தியசாலையில் குறிப்பிடத்தக்க அளவு மருந்துகள் கையிருப்பிலுள்ளதால் மக்கள் கஷ்டமின்றித் தமது நோய்க்கான கிசிச்சையினைப் பெறுவதற்கு ஏதுவாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

154-சி

## இராசி பலன்

05-09-1995

செவ்வாய்க்கிழமை

[தமிழுக்கு ஆவணி-20]

ஏகாதசி மாலை 5-08 வரை, பூராடம் மு. ப. 11-06 வரை; சித்த யோகம், பரிவர்த்தன ஏகாதசி விரதம், இராகு காலம் மாலை 3-04 முதல் 4-34 வரை, சுபவேளை மாலை 4-34 முதல் 6-04 வரை.

மேஷம்; நிர்ப்பந்தம், வேலைப்பழு, மனஉளைச்சல்.

இடபம்: எதிர்பாராத கவலை' பொருள் செலவு, கோபப்படல்

மிதுனம்: பெண் அனுகூலம், காரியசித்தி, பயணம்.

கடகம்; இனசன நன்மை, தொழில் உறவு, பாராட்டு.

சிங்கம்: தர்ம சங்கடம், வீண் சச்சரவு, முயற்சி தோல்வி.

கன்னி: புத்திசஞ்சலம், பண முடை, தடுமாற்றம்.

துலாம்: கருத்தொற்றுமை, தொழில் லாபம், விருந்தோம்பல்.

விருச்சிகம்: வீண் செலவு, அதிகாரிகள் துயர், அதிக கவலை.

தனுசு: குடும்ப நன்மை, நண்பர் உதவி, தெய்வீக செலவு.

மகரம்: கலைஞானம், விவாதத் திறமை, பணவரவு.

கும்பம்: விரோதிகள் பயம், குழம்பிப்போதல், தொழில் துன்பம்

மீனம்: ஏளனப்பேச்சு. பழிதீர்த்தல், ஆன்மீகசிந்தனை.

— ஜோஸ்யர்

# சர்வதேச மகளிர் மாநாடு சீனாவில் நேற்று ஆரம்பம்

(பீக்கிங்)

ஐ. நா. சார்பில் நடைபெறும் சர்வதேச மகளிர் மாநாடு நேற்று சீனாவின் தலைநகர் பீக்கிங்கில் ஆரம்பமானது.

180 நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரம் பிரதிநிதிகள் இம் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். அரசுப்பிரதிநிதிகளும் அரசு சாரா அமைப்பு பிரதிநிதிகளும் இதில் அடங்குவர்.

பெண்களின் கல்வி, அபிவிருத்தி, சுகாதாரம். மற்றும் சமுதாயத்தில் பெண்களின் நிலைபெண்ணுரிமை போன்ற விடயங்கள் இம்மாநாட்டில் ஆராயப்படவுள்ளது.

12 நாட்கள் நடைபெறும் இந்தமாநாட்டில் மேற்கூறிய விடயங்களை பெண்கள் எதிர்நோக்கும் பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளது இதற்கென பெண் அறிஞர்கள் மகளிர் அமைப்புக்கள் ஏற்கனவே பல ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளன.

இதற்கிடையில் இம்மாநாட்டில் கலந்து கொள்ளும் வெளிநாட்டவர்கள் மீது சீன பொலிஸார் மேற்கொள்ளும் அழுத்தங்களும் கெடுபிடிகளும் மாநாட்டின் முக்கியத்துவத்தை குலைத்து விடும் அபாயம் தோன்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது; க.சி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-09-05

செவ்வாய் இரவு

8 02 ஊர் சுற்றும் ஒலிவாங்கி
8-10 அறிந்து கொள்ளுங்கள்
8-20 நலந்தானு - நிகழ்ச்சியில் 'கண்நோய்' பற்றிய சில வைத்திய குறிப்புகள்
8-30 செய்திகள்
8-40 கருத்துக்களம்-இ. இராஜேஸ்வரன் எழுதிய 'வேலிப்பொட்டு'
8-50 மலரும் மொட்டுக்கள்

1995-09-06

புதன் காலை

7-02 மாவீரவணக்கம்
7-15 நீங்கள் கேட்டவை
7-30 செய்திகள்
7-35 பத்திரிகைச்செய்திகள்
7-45 நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-09-05

செவ்வாய் மாலை

5-01 சிந்தனைச்சிதறல்
5-02 எழுச்சிக்கீதம்
5-10 புதியவை
5-15 தமிழிசை
5-30 வானொலி மதியுகம்-24
6-00 சிந்தனைக்குச் சில விநாடிகள்
6-02 என் தெரிவு
6-10 செய்திகள்
6-15 விளையாட்டுச் செய்திகள்
6-20 இவ்வாரம்இவர் என்பன இடம்பெறும்

## ஆலயதரிசனத்தில் பக்தரிடம் திருட்டு

(நெல்லியடி)

ஆலய தரிசனத்தில் ஈடுபட்டிருந்தவரின் உடமைகளடங்கிய பைகள் இனந்தெரியாதோரால் பட்டப் பகல் வேளை திருடப்பட்டுள்ளது.

அண்மையில் இத்திருட்டுச் சம்பவம் பருத்தித்துறை சிவன் கோவிலில் இடம்பெற்றது:

திருடப்பட்டுள்ள இப்பையில் உணவுமுத்திரை தேசிய அடையாளஅட்டை ஒரு தொகைப்பணம் மாதாந்த உதவிப்பணம் பெறும் அட்டை போன்றவைகள் அடங்கியிருந்தனவென்று உடமைகளைப் பறிகொடுத்த தும்பளையைச் சேர்ந்த ஆர் ஆனந்த சுப்பிரமணிய சர்மா தெரிவித்துள்ளார்.

160-சி

## கனடாவில் நடைபெற்ற 'திருவாசக விழா'

(ரொறன்ரோ)

கனடா ஒன்ராறியோவில் அண்மையில் ''திருவாசக விழா'' மிகவும் கோலாகலமாக நடைபெற்றது

லான்ஸ்டவுண் தமிழர் கூட்டுறவு இல்லம் மூன்றும் மாடியில் சைவப் புலவர் திரு. க. சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆத்மஜோதி ந. முத்தையா அருளுரை வழங்கினார்.

கனடாவின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக் கணக்கான ஈழத் தமிழர்கள் இவ் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இவ் விழாவில் சிலம்பொலி நாட்டியாலய மாணவிகளின் நடனமும் நிர்மலா தர்மராசாவின் பாட்டுக் கச்சேரியும் இடம் பெற்றதுடன் திருவாசகத்தின் பெருமைபற்றி சட்டத்தரணிகள் திரு. எஸ். மகேந்திரன், திரு; பொ. கைலாசநாதன், திரு. தம்பையா ஸ்ரீபதியும், நயினை ஈம்பதி திரு ப.க. கனகசபாதியின் சங்கீத கதாப்பிரசங்கமும் இடம்பெற்றது. இவ்விழாவை கனடா ஒன்ராறியோ மாணிக்க வாசக மன்றத்தினர் ஒழுங்குசெய்திருந்தனர்.

155-சி

## மருதானையில்

(1ம் பக்க தொடர்ச்சி)

இக்குண்டு வெடிப்பால் ரயில் தண்டவாளங்கள் பல தூக்கி வீசப்பட்டுள்ளன. அங்கு நின்ற ஒருவர் காயமடைந்துள்ளார் இதையடுத்து ரயில் சேவையும் சில மணிநேரம் தாமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

-இ

## தமிழக காட்டுப் பகுதியில் புலிகளை தேடும் பொலிஸார்

(சென்னை)

வேலூர் சிறையில் இருந்து தப்பிச் சென்றுள்ள விடுதலைப் புலிகளை தமிழக கடற்கரைப் பகுதிகளிலும் மேட்டூர் வனப் பகுதிகளிலும் படையினர் தேடி வருகின்றனர் என மாநில காவல்துறை அதிகாரி வால்டர் தேவாரம் தெரிவித்துள்ளார்.

சிறையிலிருந்து தப்பியவர்களில் 20 பேரை கைதுசெய்ததற்காக, 28 பொலிசாருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழகத்தின் பல பகுதிகளிலும், தப்பிய புலிகளைத் தேடும்பணி பெருமெடுப்பில் நடைபெற்று வருவதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது. ம-சி

# மனைவியைக் கொன்ற கணவன் கைதானார்

(நெல்லியடி)

படுக்கையில் வைத்து மனைவியைக் கத்தியால் குத்திய கணவனை பருத்தித்துறை காவல் துறையினர் மறு நாள் மாலை, வீடொன்றில்வைத்துக் கைது செய்து குத்திய கத்தியையும் மீட்டனர்.

தும்பளைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு இக்கத்திக் குத்துக்கொலை இடம் பெற்றது.

மனைவியைக் கொலை செய்த கணவரான நிரேந்திரன் (வயது 38) என்பவரைத்தேடி வலை விரித்த காவல் துறையினர் மாதனைப் பகுதியிலுள்ள வீடொன்றில் வைத்து கைது செய்துள்ளனரெனத் தெரிய வருகிறது.

160-சி

## நோயாளர் அவதி

(கொழும்புத்துறை)

மூழங்காவில் அரசினர் ஆஸ்பத்திரியில் பல மருந்துப் பொருட்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருகிறது. இவ் வைத்தியசாலையில் போதியளவு மருத்துவ வசதிகள், மருந்துப் பொருட்கள் இன்மையால் அநேக நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

இதனல் நாசிக்குடாவையும் அதை அண்மித்த பல பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு போதிய மருத்துவ வசதி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

154-சி

## அதிரடிப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரவதை செய்யப்பட்டு, படுகொலை செய்து வாவிகளில் போடப்பட்ட மர்மச் சடலங்களுக்கும்இவருக்கும்தொடர்பு இருப்பதாகப் பொலிஸார் கருதுவதன்பேரிலேயே இவர் தற்போது விசாரிக்கப்பட்டு வருகின்றார்.

இப்படுகொலைகளுடன் இன்னும் பலர் சம்பந்தப்பட்டிருப்பதால், விசாரணைகள் மேலும் முடுக்கி விடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கொழும்பு விசேட அதிரடிப்படை தலைமை அலுவலகத்தில் இடம் பெற்றதாக குறிப்பிடப்படும் 22 படுகொலைகள் பற்றி விசாரித்துவரும் சி. ஐ. டி. பொலிஸார், றிசேவ சப் இன்ஸ்பெக்டர் பதவி வகிக்கும் மற்றுமொரு அதிரடிப் படை அதிகாரியை கைது செய்துள்ளனர்.

தற்சமயம் வடக்கு கிழக்கில் சேவையாற்றுபவர்களும் சி. ஐ. டி. பிரிவினல் விசாரணை மேற்கொள்ளப்படவென தேவைப்படுபவர்களுமான இரண்டு விசேட அதிரடிப் படைச் சாரதிகள் கொழும்பு திரும்பும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள்.

சப் இன்ஸ்பெக்டர் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் சி. ஐ. டி. பிரிவினரால் கைது செய்யப்பட்ட விசேட அதிரடிப்படையினரின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது; வி-கே-இ

## பதிவு செய்ய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் பணப் பயிரான புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களின் உற்பத்தியை நெறிப்படுத்தி வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் முகமாக இம்மாதம் 15ம் திகதிக்கு முன் புகையிலை ஏற்றுமதி செய்வோரையும் சுருட்டு உற்பத்தியாளர்களையும் தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவனத்தின் உள்நாட்டு உற்பத்தி ஏற்றுமதி பிரிவில் பதிவுசெய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கையை மேற்கொள்வதால் மக்கள் உற்பத்தி செய்த புகையிலை, சுருட்டு போன்றனவற்றை வெளியிடங்களுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு ஏற்படுவதுடன் சுருட்டு தொழிலாளர்களினதும், புகையிலை விவசாயிகளினதும் தொழிலுக்கு உத்தரவாதப் படுத்தப்படுகிறதென்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.


உ

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ வருஷம் ஆவணி மாதம் 21ம் நாள்[06-09-1995]புதன்கிழமை பகல் 09 மணிமுதல் 10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

யாம் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

# புதிய நதியா நகை மாடம்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து தங்களை மகிழ்விக்கவிருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் சமயோசிதரும் வருகை தந்து சிறப்பிக்குமாறும் ஸ்தாபன வளர்ச்சிக்குதவுமாறும் அன்புடன் வேண்டிக்கொள்ளும்

103, லெப். கேணல் சந்தோசம் தெரு
[கஸ்தூரியார் வீதி]
யாழ்ப்பாணம்

தங்களன்புக்குரிய
புதிய நதியா நகை மாடம்
ஸ்தாபனத்தார்

(எ5258)

மணிவாக்கு

மணிக்கணக்கில் நிறையப் பேசுவதைக் காட்டிலும் குறைந்த அளவு காரியங்களைச் செய்வது மேலானது.

— சுவாமி விவேகானந்தர்.

# நமது நோக்கு

## பொய்யும் புரட்டும்

ஜனாதிபதி சந்திரிகாவின் தீர்வுத் திட்ட யோசனைகள் பெரும் மாற்றங்களை கண்டுள்ளபோதும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன்னர்கூட அது முன்வைக்கப்படுவது தாமதமாகியுள்ளது என்று அறியக்கூடியதாயிருக்கிறது.

தீர்வு யோசனைகளில் காணப்படும் சில விடயங்கள் குறித்து பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயகா அதிருப்தி கொண்டுள்ளது மட்டுமல்லாமல் அவை மாற்றப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அண்மையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுடன் சிறிமாவோ தீர்வுத் திட்ட யோசனைகள் பற்றி கலந்துரையாடியுள்ளதோடு தீர்வுத் திட்ட யோசனைகளிலுள்ள குறைபாடுகள் குறித்தும் பேசியுள்ளார்.

அரசு ஒற்றையாட்சித் தன்மையை தொடர்ந்து பேணுவதோடு பிராந்திய சபைகளுக்கு வழங்கும் அதிகாரங்களையும் பெருமளவில் குறைத்தால் மட்டுமே பொதுசன ஐக்கிய முன்னணி எம். பிக்கள் தீர்வுத் திட்ட ஆலோசனைகளுக்கு ஆதரவு வழங்குவர் என்று மூத்த அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா கூறியுள்ளார். இவரது இவ்வெதிர்ப்பு சந்திரிகாவுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளமையால் அவருடன் இதுபற்றி சந்திரிகா பேச்சுக்களை நடத்தவும் வேண்டியிருந்தது.

இதற்கெல்லாம் மேலான பேரிடியாக மல்வத்தை அஸ்கிரிய பௌத்த பீடாதிபதிகள் ஒன்றிணைந்து நாட்டுக்கு ''பிராந்தியங்களின் ஒன்றியம்'' என்ற பெயர் வைத்தால் அது சிறிலங்காவின் 2500 ஆண்டு கால வரலாற்றைத் திரித்துவிடும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளனர். அவர்கள் தாங்கள் 25-07-95 திகதி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் நாட்டில் உள்ள நெருக்கடி நிலைமையை முற்றுப் புள்ளிக்குக் கொண்டு வந்து அமைதியை நிலைநாட்டும் வரை அரசியல் தீர்வுத் திட்டம் எதனையும் கொண்டுவர வேண்டாம் என்று கேட்டுக்கொண்டிருந்தபோதும் அரசு 03-08-95ல் தீர்வுத் திட்ட யோசனைகளை முன்வைத்தது பற்றி தாம் கவலைகொள்வதாகக் கூறியுள்ளனர். அவர்களைப் பொறுத்தளவில் வட-கிழக்கில் நடப்பது பயங்கரவாதப் போர். பயங்கரவாதம் அழித்து ஒழிக்கப்படும் வரை அரசியல் பரவலாக்கல் யோசனைகள் நாடாளுமன்றில் அறிமுகப்படுத்தப்படாதாம்.

பௌத்த பீடாதிபதிகள் தாங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிய கூட்டு மகஜரில் தாயகக் கோட்பாடு ஒன்றையும் முன்வைத்துள்ளனர். அதாவது வெலிஓயா (மணலாறு)வையும் கென்ற் பாமை [Kent Farm] யும் தாயகமாகக் கொண்டு வாழ்ந்த சிங்கள மக்கள் அங்கிருந்து விரட்டப்பட்டு அகதி முகாம்களில் வாழ்கிறார்களாம். வடக்கு-கிழக்கு பிராந்திய சபைக்குச் சொந்தமான காணிகளுக்குள் தீர்வுத் திட்ட யோசனைகள் அமுலுக்கு வந்தால் ஒரு சிங்களவராவது அங்கு வாழ முடியாது. அப்பகுதிகளைத் தம் தாயகமாகக் கொண்ட சிங்கள மக்கள் அங்கு வாழ அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று விதண்டாவாதம் பேசுகிறார்கள் மகாவம்சம் இலங்கைத் தீவின் வரலாற்றை திரித்துக் கூறுகிறது. இலங்கை முழுவதும் பௌத்த சிங்கள நாடு என்று பொய்யான சரித்திரத்தை அது எழுதிவைத்திருக்கிறது. இன்றைய மகாநாயக்கர்கள் கடந்த 40, 50 வருடத்திற்கு சற்று முன் பின்னுள்ள நடவடிக்கைகளையே திரித்துக் கூற முனைகின்றனர். கிழக்கில் பட்டிப்பளை பகுதியை குடியேற்றமாக்கிய சிங்களவர்கள் அப்பகுதியை தமது தாயகமாகப் பார்க்கிறார்கள்.

மணலாறில் ஒரு சிங்களவன் கூட இருந்திராத பிரதேசத்தை மிகச் சமீபகாலத்தில்தான் தமிழ்க் குடி மக்களை பலாத்காரமாக அடித்துக் கலைத்து விட்டு அரசு சிங்களவரைக் குடியேற்றியது. அந்தப்பிரதேசமும் மகாநாயக்கர்களின் கூற்றுப்படி சிங்களவர்களின் தாயகமாக ஆக்கப்பட்டுள்ளது.

ஒட்டு மொத்தத்தில் பார்க்கப் போனால் தனது கட்சிக்குள்ளும் எதிர்க்கட்சியினராலும் பௌத்த பேரினவாத அமைப்புகளாலும் தமிழர்களுக்கு ஒரு அற்ப சலுகைதானும் கொடுக்கப்படாது என்ற எதிர்ப்புகளின் மத்தியில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கு முன்னால் கூட தீர்வுத்திட்டம் செல்லமாட்டாத நிலை உருவாகி கிடப்பில் கிடக்கப் போகிறது.

பொய்யிலும் புரட்டிலும் உருவாக்கப்பட்ட பௌத்த சிங்களப் பேரினவாதம் தன் பிழையான நிலைப்பாட்டை தக்க வைப்பதற்கு மேலும் மேலும் பொய்களையும் புரட்டுக்களையும் முன் வைக்கும். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இவையெல்லாம் பழம் கதைகள். சிங்களவர்களின் வரலாறும் தேவையில்லை. அவர்கள் தரும் பிச்சையும் தேவையில்லை. தமிழீழமே முடிந்த முடிபு.

# அரசின் திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு நிலைமை மோசமடைந்து வருகிறது

(கொழும்பு)

அரசு முன்வைத்துள்ள தீர்வு யோசனைக்கு அரசு தரப்பில் பலத்த எதிர்ப்பு வலுத்து வருகிறது. இதனால் இனப்பிரச்னை ஒரு மோசமான கட்டத்தை அடைந்துள்ளதாக அதிகார பூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனையை அப்படியே ஏற்கப்போவதில்லை எனவும் இதில் பல மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் இல்லையேல் இதனை தாங்கள் ஏற்கப்போவதில்லை எனவும் அரச தரப்பு எம். பிகள் பலரும் கூறியுள்ளனர்.

இந்நிலையிலேயே இம்மாதமுற்பகுதியில் தனது தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிடம் முன் வைக்கவிருந்த அரசு அதனை பல மாதங்களுக்கு தாமதிக்கவுள்ளது.

இது அரசு இத்தீர்வுத்திட்டத்தால் எதிர்நோக்கும் பெரும் பிரச்னையையே காட்டுவதாக பத்திரிகையாளர்கள் தெரிவித்துள்ளனர். -சி

# இராணுவ வெற்றியின் பின்பே அரசியல் தீர்வு முன்வைக்கப்படும்

(கொழும்பு)

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை பலமிழக்கச்செய்யாத வரை புதிய பரிந்துரைகளுக்கு அரசியல்த்தீர்வு காண முடியாதென பரவலாக நம்பப்படுவதாக பெயர் கூற விரும்பாத மூத்த அமைச்சரொருவர் தெரிவித்ததாக ஏ,எப்.பி செய்தி தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் வெற்றி பெற்று, அவர்கள் பலமிழந்த பின்னரே அரசியல்த்தீர்வு தொடர்பாக அரசு தனது திட்டத்தை முன்வைக்க வேண்டும் எனவும் பலரும் கருதுவதாகவும் இந்த அமைச்சர் கூறியுள்ளாராம்.

இதேவேளை அரசு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முன் விடுதலைப்புலிகளை பலமிழக்கச் செய்து புலிகளின் பிடியிலுள்ள பகுதிகளை மீட்கவேண்டுமென பௌத்த அமைப்புகள் பல அரசை கோரிவருகின்றன.

புலிகள் பலமிழந்தால் அரசியல் தீர்வாக குறைந்த அதிகாரம் கொண்ட தீர்வுத்திட்டத்தை தமிழர்களுக்கு வழங்கலாம் என தெற்கில் பலரும் கருதுவதாகவும் ஏ. எப். பி செய்தி தெரிவித்தது. -சி

## களவாக விறகு வெட்டிய மூவர் பிடிபட்டனர்

(நெல்லியடி)

களவாக வெட்டிய சுமார் எண்ணாயிரம் ரூபா பெறுமதியான விறகை பொச்சுமட்டைகளினால் மூடிமறைத்து லான்ட் மாஸ்டரில் கடத்திச் சென்ற மூவரை நள்ளிரவு வேளை ரோந்துசென்ற கோப்பாய் காவல்துறையினர் மடக்கிப் பிடித்தனர்.

இச்சம்பவம் கடந்த 22ம் திகதி நள்ளிரவு 11 மணியளவில் கோப்பாய்ச் சந்தியில் நிகழ்ந்துள்ளது.

தென்மராட்சியிலிருந்து மானிப்பாய் பகுதியை நோக்கி லான்ட்மாஸ்டரில் விறகு கடத்தியவர்களே காவல்துறையினரிடம் அகப்பட்டனர்,

இணுவிலைச் சேர்ந்த மூவரையும். லான்ட்மாஸ்டரையும் கோப்பாய்க் காவல்துறையினர் தடுத்து வைத்துள்ளனர். 160 சி

## மரக்கறி விதைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு மரக்கறி உற்பத்தி பெரிதும் வெற்றியளித்துள்ளன.

குரங்குவால் பயிற்றை, வெண்டி போன்ற மரக்கறி விதைகள் போதியளவு கையிருப்பில் விவசாயப் பயிற்சி நிலையத்தில் உள்ளன.

இதனைவிட கத்தரி, புடோல், பாகல் போன்ற விதைகளையும் இம்மாத நடுப்பகுதியில் பெற்றுக்கொள்ளலாம் என்று விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். -170

## பொருட்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சங்கம் மற்றும் வர்த்தகத் திணைக்களத்துக்கே ஆயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மாலோ கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளது.

இக் கப்பலில் சீனி, சவர்க்காரம், லக்ஸ்பிறே பால்மா ஆகிய பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளன. இப்பொருள்கள் வர்த்தக திணைக்களங்கள் ஊடாகவும் கூட்டுறவுக் கடைகள் ஊடாகவும் மக்களுக்கு விநியோகிக்கப்படும். 162-சி

## பொய்யிலே உருவாகி பொய்யிலே வளர்ந்தவர்களே!

உலகில் எத்தனையோ பாவங்கள்
அத்தனை பாவங்களுக்கும் தாயானவள்
அக் கொடியவள் பெயர்தான் பொய்!
பொய்யே உருவான சந்திரிகாவே
ரத்வத்தை அம்மானே
பாவமூட்டை சுமக்கும் உங்களை
அந்தப் புத்தனே மன்னிக்கமாட்டான்.
தேவாலயத் தாக்குதலைக் கண்டு
அவனே கண்ணீர் விட்டிருப்பான்,
உண்மையைக் கூறுகிறேன்
உய்வில்லை உங்களுக்கு
உங்கள் கண்களை மூடிக்கொண்டால்
உலகமே இருண்டு விடுமோ?
உண்மைக்கு —
மயிரிடை துவாரம் போதும்
உங்கள் பவிசை
உலகிற்கு உணர்த்திவிடும் அது.
தமிழ்மக்கள் வேறு புலிகள் வேறு?
நல்ல வேடிக்கை அம்மா இது
புலிகள் என்ன பறக்குந் தட்டில் வந்தவர்களா?
தமிழ்மக்களின் பிள்ளைகள்தானே
அது சரி —
ஏதோ துள்ளிக்குதித்து முன்னேறுதலாமே
நெருப்புக் கக்கும் பறவைநாகமாமே
பின் எப்படி நடந்தது
அப் பின்னேக்கிப் பாய்ச்சல்கள்?
ஓகோ... புலி பாய்ந்துவிட்டதா?
உங்கள் ஊதுகுழல் அப்புக்காத்தர்
வானளாவப் பீற்றினரே தீர்வுத்திட்டத்தை
இப்போ வாயடைத்துக் கிடப்பதேனோ?
நாங்கள் கூறுவது இதுதான்
நீங்கள் பிச்சைபோட
நாங்கள் ஒன்றும் கையேந்தி நிற்கவில்லை;
காலம் சொல்லும்
நாம் பெறப்போவது எதுவென்று
பொய்யிலே உருவானவர்களே
அதுவரை கொஞ்சம் பொறுங்கோ!

-'நவகவிசுதன்'

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



# எம். திருச்செல்வத்தின் கபட நாடகம்

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 1965 மார்ச்சில் பொதுத் தேர்தல் நிகழும் என அறிவிக்கப்பட்டது. பிரதான கட்சிகளாக ஐ.தே.க. ஒரு புறமும், ஸ்ரீ. சு. க- ல. ச. ச க- க; கட்சிகளின் கூட்டணி மறுபுறமாகவும் போட்டியிட்டன; வடக்கு— கிழக்கு மாகாணங்களில் வழக்கம் போலவே சமஷ்டிக் கட்சியும் தமிழ் காங்கிரஸ்கட்சியும் களத்தில் இறங்கின;

## சமபலம்

சிங்களக் கட்சிகளைப் பொறுத்த மட்டில் ஒருவரை மீறி அடுத்தவர் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுதல் இயலாது என்பதை அனை பிரசாரத்தின் போதே தெளிவாகத் தெரிந்துகொண்டன. சிறுபான்மைக் கட்சிகளை சாய்த்து கொண்டால்தான் விமோசனம் உண்டு என்ற நிலையில் அவை செயலில் இறங்கின. சமஷ்டிக் கட்சியைத் தம்முடன் இணைத்துவிட அவை படாதபாடுபட்டன; ஒவ்வொரு தேர்தல் சூழ்நிலையிலும் முக்கியசிங்களக்கட்சி இவ்வகையான சிறுபான்மைகட்சி இணைப்பை பின்வருங் காலங்களில் தொடர்ந்து கைக்கொண்டனர்.

செல்வாவிடம் கணிசமாகவே செல்வாக்குப் பெற்றிருந்தார் எம். திருச்செல்வம். தேர்தலில் பங்காளராகவோ போட்டியாளராகவோ அன்றி பிரசாரம் செய்பவராகவும் இல்லாமல் அவர் கொழும்பில் எந்த அரசியல்வாதியும் அண்மிக்கக் கூடியவராக இருந்தார்.

திருச்செல்வத்துடனான சந்திப்பைப் பகிரங்கப்படுத்தாமல் ஒவ்வொரு கட்சிக்காரரும் தனித்தனியே முயன்று கொண்டிருந்தனர். எல்லாம் சமஷ்டிக் கட்சியை தத்தமது கட்சியுடன் இணைத்துவிடும் நோக்கில்தான்.

## இரகசியப் பேச்சு

ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஆமாம் போட்டுவிட்டு கொழும்புச் சந்திப்புக்கள் பற்றிய செய்திகளை திருச்செல்வம் செல்வாவிடம் கொண்டு செல்வார். இப்படியாக ஐ.தே.க. சாரிபில் லேக்ஹவுஸ் கம்பனியின் எஸ்மன்ட் விக்கிரமசிங்கவும் ஸ்ரீ. சு. க. கூட்டணிக்காக என். எம். பெரேரா அப்துல் அஸீஸ் என்போரும் திருச்செல்வத்துடன் இரகசியப்பேச்சு நடத்தினர்.

ஐ.தே.க.வுடனான பேச்சு திருப்தி அளிக்கவே எஸ்மன்ட் விக்கிரமசிங்கவை அழைத்துக் கொண்டு திருச்செல்வம் யாழ். சென்று செல்வா அமிர்தலிங்கம் ஆகியோரை சந்திக்க ஏற்பாடு செய்தார்;

தேர்தல் நடைபெற்ற பின்னரே எனக்கு இவ்விடயங்கள் தெரியவந்தன. இவற்றை நான் அறியக்கூடாது என்கிற காரணத்தால் திருச்செல்வம் திட்டமிட்டு யாவற்றையும் இரகசியமாக நடத்தியிருக்கிறார்; இவ்வாறானநடவடிக்கைகளை மேற்கொண்டால் எனது எதிர்ப்புக்கு முகங்கொடுக்க நேரிடும் என்பதை அறிந்த திருச்செல்வம் இந்தச் சந்திப்புக்கள்' பேரங்கள் குறித்த சங்கதிகளை சத்தமின்றி வைத்துக்கொண்டார்.

## தமிழர் நலன்

தமிழர் நலன்கள் பங்கமுறுகையில் சமஷ்டிக் கட்சியில்

''தமிழர் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்'' என்ற நூலை முன்னாள் காவலூர் நாடாளுமன்ற அங்கத்தவரும், 'சுயாட்சிக் கழகத்தை' உருவாக்கியவருமான வி. நவரத்தினம் அவர்கள் எழுதியுள்ளார். அவரது நூலிலிருந்து ஒரு பகுதியின் சாராம்சம் தரப்படுகின்றது.

இருக்கும் நாம் நாடாளுமன்றில் எல்லாவழிகளிலும் அப்பாதிப்பை எதிர்ப்பதுஎன்பதே எமது கொள்கை. அப்படியாயின் ஆட்சிக்கு வரமுயலும் எந்த சிங்கள அரசுக்கும் ஒத்துழைப்புத்தர மறுப்பதும் இவ்வகையான எதிர்ப்புக்களில் ஒன்றாக அமையும் என்பதே எனது நிலைப்பாடு;

சுதந்திரத்துக்கான எமது அரசியல் நடவடிக்கைகளை கட்சிக்கு கட்சி அடகுவைத்து விலைபேசி யாதேனும் ஒருகட்சி ஆட்சிபெற ஒத்துழைக்கும் இழிவான செயல் எக்காலத்தும் எமது நோக்கமாக இருத்தல் ஆகாது என்பதே எமது நாடாளுமன்ற நிலைப்பாடாகும்.

அரசியலமைப்பை செயலற்றதாக்குவது இயலுமான போது அதை இல்லாதொழிப்பது என்பது சமஷ்டிக் கட்சியின் தொடக்கத்திலேயே நாம் ஆணித்தரமாக ஏற்றுக்கொண்டது.

## தூதுக்குழு

எக்கட்சிக்கும் பெரும்பான்மை இன்றிய நிலையில் தேர்தல் முடிவுற்றது; இது எதிர்பார்க்கப்பட்டதே; ஐ.தே.க. தலைவர்களைச் சந்திக்க சமஷ்டிக் கட்சியின் தூதுக்குழுவொன்று கொழும்பு செல்லத் தயாரானது. தயாராக்கியவர் திருச்செல்வமே. நால்வர் மட்டுமே இக்குழுவில் இடம்பெற வேண்டுமென திருச்செல்வம் வலியுறுத்தினார்.

ஆனால், தமிழ் மக்கள் நலனில் தீவிர அக்கறை கொண்டவர்கள் கட்சியில் துடிப்பானவர்கள் எனக் கருதப்பட்ட கே. சிவானந்தசுந்தரம், கே. கனகேந்திரம் போன்றோர் நானும் அக்குழுவில் ஒருவராக கொழும்புசெல்லவேண்டுமென வாதிட்டனர். கட்சியின் தீவிர இளம் தலைமுறையினரின் விருப்புக்கு இணங்கி நானும் குழுவில் இடம்பெற்றேன். திருச்செல்வம் இதை விரும்பமாட்டார் எனத் தெரிந்தும் நான் கொழும்பு செல்வது உறுதியாயிற்று.

ஐ.தே.க. தலைவர்களுடனான மாநாடு மிக இணக்கமான சூழ்நிலையில் நடந்தது. ஐ.தே.க. தரப்பில் டட்லி சேனநாயக்க, ஜே. ஆர். ஜெயவர்த்தன, வி. ஏ. சுகததாச, எஸ்மண்ட் விக்கிரமசிங்க, எம். வி. பி. பீரிஸ் என்போர் முக்கியமானவர்களாக சமூகமளித்திருந்தனர். திருச்செல்வமும் எஸ்மன்ட் விக்கிரமசிங்கவுடன் யாவற்றையும் ஏற்கனவே ஏற்பாடு பண்ணிக் கொண்டதால் அங்கு அதிகபேச்சுக்குஇடமில்லாமல்போயிற்று வானஉரசவாதப்பிரதி வாதம் எதுவும் எழவில்லை — நான் தலையிடும்வரை.

பேச்சின்போது விடுபட்டுப் போன மிக முக்கிய விடயம் ஒன்றை நான் கவனிக்கத் தவறவில்லை, சமஷ்டிக்கட்சியின் பிறப்பு தொடக்கம் அக்கட்சி எவ்விடயம் குறித்து ஒவ்வொரு அரசாங்கத்தையும் எதிர்த்து வந்ததோ அவ்விடயம்- தமிழர் நிலங்களில் அரச ஆதரவுடன் சிங்களக்குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவது என்ற விடயம்.

இதுகுறித்து நான் கேள்வி எழுப்பியதுதான் தாமதம், டட்லி எஸ்மன்ட் ஆகியோர் அதிர்ந்தனர். திருச்செல்வத்தின் முகமோ கடுமையாகியது. நிச்சயமாக இப்பிரச்னை திருச்செல்வத்தின் முந்தைய கொழும்புப் பேச்சில் இடம் பெற்றிருக்கவில்லை.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தின் இறுதியாகச் சேர்க்கப்பட்ட அம்சத்தை திருச்செல்வம் அறிந்திராத காரணத்தால் இதைப்பற்றி அவர் பேச்செடுத்திருக்க முடியாது.

[தொடரும்]

# பீடைகளைக் கட்டுப்படுத்த வேப்பம்விதை உபயோகம்

(யாழ்ப்பாணம்)

இயற்கை நாசினியின் பாவனையை ஊக்கப்படுத்தும் நோக்கில் தற்போது வேப்பம் விதைகள் கனிந்து சொரியும் காலமாக உள்ளதால் அவற்றை சேகரித்து கழுவி வெயிலில் காயவிட்டு காற்றுப் புகாத பாத்திரத்தில் அடைத்து தேவையான நேரத்தில் அதன் திரவத்தை பயன்படுத்துமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

1994/95 கால போகங்களில் வதிவிட வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்ட மக்கள் இக்கலவையை பூச்சிக்கு வெறுப்பூட்டியாகவும், அவற்றின் வளர்ச்சியை கட்டுப்படுத்தியும் சிறந்த பயனைப் பெற்றனர். வேப்பம் எண்ணையை பாவித்து அழுக்கணவன் பீடையை கட்டுப்படுத்தலாம், உலர்ந்த வேப்பம் இலைகளையும், வேப்பம் விதைகளையும், பாசிப் பயறு, கௌபி, உழுந்து போன்ற தானியங்களை களஞ்சியப்படுத்தும் இடங்களிலுள்ள களஞ்சியப் பீடைகளையும் கட்டுப்படுத்த பயன்படுத்தலாம்.

இயற்கை நாசினியை பாவித்து விவசாயத்தில் ஈடுபடுமாறும் மேலதிக விபரங்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் விவசாயிகள் கேட்கப்பட்டுள்ளனர். கி-சி

# ஐரிஸ்மோனா விவகாரத்தை நாடாளுமன்றில்எழுப்பமுயற்சி

(கொழும்பு)

'ஐரிஸ்மோனா' கப்பல் பயணிகள் விடுவிக்கப்படாத பட்சத்தில் தான் இது தொடர்பாக நாடாளுமன்றில் கேள்வி எழுப்பப்போவதாக ஈ. பி. டி. பி, செயலாளர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்;

கப்பல் பயணிகளினதும், மாலுமிகளினதும் விடுதலைக்கு அரசு மேற்கொண்டுள்ள முயற்சி காணாது எனக் கூறியுள்ள இவர் இதுகுறித்து நாடாளுமன்றில் பிரச்னையை கிளப்புவதற்கு தமது கட்சியினர் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

இதேவேளை கப்பல் பயணிகள் அனைவரும் விடுதலைப் புலிகளின் பராமரிப்பில் நலமாக இருப்பதாகவும் இவர்களில் எவரும் உடல்நலம் குன்றவில்லை எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது. இக்கப்பலில் வந்த மூன்று கர்ப்பிணிகள் பிள்ளைகளை பிரசவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் கப்பல் பயணிகளின் விவகாரம் நீடிப்பதாகவும் புலிகளின் நிபந்தனையும் அதிகரித்து வருவதாகவும் அரச அதிகாரி ஒருவர் கூறியுள்ளார். -ශි

# வாழ்க்கைச் செலவு உயர்வால் அரச ஊழியர் அதிருப்தி

(கொழும்பு)

வாழ்க்கைச்செலவுஉயர்ந்து செல்வதையடுத்து அரசாங்க ஊழியர்கள் அரசின் மீது பெரும் அதிருப்தியடைந்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கையில்; வாழ்க்கைச் செலவு உயர்வு மற்றும் விலைச்சுட்டெண் அதிகரிப்பினால் அரசாங்க ஊழியர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள் இவர்கள் பகுதிநேர வேலை தேடிஅலைகிறார்கள்.

ஒய்வூதியம் பெறுவோரும் இன்னலை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மோட்டார் வாகனம் மீது அரசாங்கம் அமுல்படுத்தும் வரிவிதிப்பினால் போக்குவரத்து அதிகரிப்பு அதன் மூலம் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்க கூடும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது. க-கி

# வேலூர் சிறையைப் பார்வையிட மத்தியஉள்துறை அமைச்சர்விருப்பம்

(சென்னை)

விடுதலைப் புலிகள் 43 பேர் தப்பிச்சென்ற வேலூர்சிறைச் சாலையை, தான் நேரில்சென்று பார்வையிடப் போவதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு: ராஜேஷ் பைலட் கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்: தமிழக முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து சிறப்பு முகாமில் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கவுள்ளேன்;

தமிழகத்தில் அ. தி. மு. க. ஆட்சிக்கு வந்தபின்னர் விடுதலைப் புலிகள் ஒன்பது முறைக்கும் அதிகமாக சிறைகளிலிருந்து தப்பிச் சென்றுள்ளனர். இத்தகைய போக்கு தொடர்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இதனை மத்திய அரசு சகித்துக்கொள்ளாது;

வேலூர் சிறையிலிருந்து புலிகள் தப்பிச் செல்லக் காரணமாயிருந்த அதிகாரிகள் மீது மாநில அரசு இலேசான நடவடிக்கையே எடுத்துள்ளது. இவ்விடயத்தில் தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்; இ

பொருண்மிய உயர்வால்: கண்டிடும் உச்சம்
போரிடும் பூமிக்கு இனியில்லை அச்சம்.

## சீனப் பெருஞ்சுவரில் மட்டக்களப்பு 'பன்பாய்'

(பீகிங்)

சீனப் பெருஞ்சுவரில் மட்டக்களப்பு 'பன்பாயும்' காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

சீனாவில் நேற்று ஆரம்பமான சர்வதேச மகளிர் மாநாட்டுக்குச் சென்ற ஒவ்வொருநாட்டவரும் தங்கள், தங்கள் நாட்டு கைப்பணிப் பொருட்களை சீனப்பெருஞ் சுவரில் காட்சிக்கு வைத்துள்ளனர்.

இம் மாநாட்டிற்கு மட்டக்களப்பிலிருந்து சென்றுள்ள மூன்று பெண் பிரதிநிதிகள் மட்டக்களப்பில் பெயர் பெற்ற 'பன்பாயை' சீனப் பெருஞ்சுவரில் காட்சிக்கு வைத்துள்ளனர். (சி)

## கிழிக்கப்பட்ட நிலையிலேயே கடிதங்கள் யாவும் வந்தன!

(யாழ்ப்பாணம்)

கல்யாணி கப்பலில் வந்த தபால்கள் அனைத்தும் உள்நாட்டு தபால்களே என்று யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்ட சமயம் தபால்கள் அனைத்தும் உடைத்து கிழிக்கப்பட்ட நிலையில் இருந்தன. பெரும்பாலான கடிதங்களை தபால் ஊழியர்கள் விநியோகிக்க முடியாத அளவுக்கு கிழிந்த நிலையில் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்

இந்த தபால்களை படையினர் கிழித்து சோதனை நடாத்தியுள்ளதுடன் கிழிந்த உரப்பைகளிலேயே தபால்களை போட்டு வடபகுதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்

வெளிநாட்டு கடிதங்கள் வரும் என்று மக்கள் எதிர் பார்த்திருந்தனர். ஆனால் உள்நாட்டு கடிதங்களையும் கொழும்பு பத்திரிகைகளையும் 60 உரப்பைகளில் போட்டு படையினர் கல்யாணி கப்பலில் அனுப்பிவைத்துள்ளனர். 170-சி

## பட்டப் பகலில் வீடுடைத்து பணம், நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)

நண்பகல் வேளையில் வீடு புகுந்த திருடன் பல ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் ஒருதொகைப் பணத்தையும் திருடிச் சென்றுள்ளான்.

கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள மு. ரகுநாதன் என்பவரது வீட்டிலேயே இத்திருட்டு நடைபெற்றுள்ளது. நண்பகல் வீட்டுக்காரர் எல்லோரும் கோவிலுக்குச் சென்றிருந்த வேளை பின்கதவை உடைத்து உட்புகுந்த திருடன் வீட்டில் இருந்த பெறுமதி மிக்க நகைகளையும் ரொக்கப்பணத்தையும் திருடிச்சென்றுள்ளான்.

சுமார் அறுபத்தைந்தாயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் ஐயாயிரம் ரூபா பணமுமே திருட்டுப் போயுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. ர-சி

## டோராவில்வந்த இருகடற்படையினர் புலிகளால் பணயமாக்கப்பட்டனர்

(கொழும்பு)

முல்லைத்தீவு கடலில் டோரா கப்பலை விடுதலைப் புலிகள் தகர்த்து அழித்தபோது அதில் வந்த கடற்படையினர் இருவரும் தற்போது புலிகளிடம் பணயக்கைதிகளாக இருப்பதாக 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது

முல்லைத்தீவுக் கடலில் கடற்புலிகளால் தடுத்து நிறுத்தப்பட்ட 'ஐரிஸ்மோனாவை' மீட்க வந்த போது இரு டோரா பீரங்கிப்படகுகள் விடுதலைப் புலிகளால் தகர்த்தழிக்கப்பட்டது. இதன் போது 4 அதிகாரிகள் உட்பட 20 கடற்படையினர் காணமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

இவர்கள் அனைவரும் உயிரிழந்ததாக கருதப்படுகின்ற போதும் இவர்களில் இருவர் புலிகளால் பிடிக்கப்பட்டு தற்போது அவர்களும் பணயமாக வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விருவரையும் விடுதலை செய்வது குறித்தும் தற்போது பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. -சி

## காகிதாதிகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரசதிணைக்களங்களுக்கு வேண்டிய காகிதாதிகள் கொழும்பிலிருந்து அண்மையில் பருத்தித்துறை வந்து சேர்ந்தமாகோ கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இக்காகிதாதிகள் வந்து சேர்ந்ததனைத் தொடர்ந்து அரச திணைக்களங்களில் இதுவரை ஏற்பட்டிருந்த காகிதாதிகளுக்கான தட்டுப்பாடு நீங்கி விடுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. 162-சி

## கடற் கரும்புலிகள்

(1ம் பக்க தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இரவு 9-30 மணியளவில் புல்மோட்டை கடற்பகுதியில் ரோந்து வந்த டோரா படகு மீதே கடற்கரும்புலிகள் தாக்குதலை நடாத்தி அதனை முற்றாக மூழ்கடித்தனர்.

இத்தாக்குதலில் டோரா படகில் வந்த கடற்படையினர் அனைவரும் கொல்லப்பட்டனர். இத்தாக்குதலை நடத்தியகடற்கரும்புலிகளான மேஜர் கண்ணன் (மட்டக்களப்பு), மேஜர் நகுலன் (யாழ்ப்பாணம்) இருவரும் வீரச்சாவடைந்தனர்.

கடற் கரும்புலி நகுலன் 'உயிர்ப்பூ' வீடியோ திரைப்படத்தில் கரும்புலிப் பாத்திரம் ஏற்று நடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. -சி

## பயிலுநர்

(1ம் பக்க தொடர்ச்சி)

உயர் கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான அறிவித்துள்ளார்.

இதற்கான நிதியும், அனுமதியும் அமைச்சரவையினால் ஏற்கனவே பெறப்பட்டு விட்டது. இப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதும் நடைமுறைக்கு வரும். இதனால் 35 ஆயிரத்திற்கும் அதிகமான பயிலுநர் ஆசிரியர்கள் நன்மை பெறுவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். வி-சி

## தமிழ்ப்பிரதேச அபிவிருத்தி நிதி ஒதுக்கீடு இல்லை?

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதனை அரசாங்கம் இரத்து செய்ய அல்லது ஒத்திப் போடுவது பற்றி ஆராய்ந்துள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக மட்டக்களப்பு செயலகத்தில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றதாகவும் இம்மாநாட்டில் உயர் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிங்கள அரச உயர் அதிகாரிகள் மட்டுமே கலந்து கொண்டனர் எனவும் அறிவிக்கப்படுகிறது.

இம்மாநாட்டில் தமிழ் அதிகாரிகள் எவரும் கலந்து கொள்ள அனுமதிக்கப்படவில்லை. வாகரைப் பிரதேசம் மீதான கட்டுப்பாட்டைத் தொடர்ந்து அமுல்படுத்தல் மற்றும் பொருட்களை மக்கள் எடுத்துச்செல்லுதல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. க.கி

## நிர்வாகசபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் குடியிருப்பு சனசமூக நலநோம்பு மூலவள நிர்வாக சபை தெரிவு தீவகக் கோட்ட சமூக மேம்பாட்டு பொறுப்பாளர். திரு. செம்மணன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக க. மார்கண்டுதாசனும், செயலாளராக அ றேஸ்மேரியும், பொருளாளராக மோ அந்தோனிப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர். 170-சி

## கப்பலை

(1ம் பக்க தொடர்ச்சி)

இக்கப்பலை தற்போதைய இடத்திலிருந்து, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் நகர்த்த முற்படும்போது, அதற்கு முன் இக்கப்பலில் வெடிகுண்டுகளோ அல்லது ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய ஆயுதங்கள் ஏதும் கப்பலில் இல்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இக் கப்பல் சம்பந்தமாகவும் மாலுமிகள் விடுதலை செய்யப்படுவது சம்பந்தமாகவும் விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்திருப்பதாக பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் பற்றி அரசுக்கு இதுவரை எதுவும் தெரியாது. அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு பற்றி நாம் தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கும் மிகத் தெளிவாகத் தெரியப்படுத்தியுள்ளோம் என்றார். வி-சி

## ஹெந்தல

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போன்றே இந்தச் சடலமும் உருக்குலைந்து, பழுதடைந்து இனம் காண முடியாத நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இச் சடலம் வீதியோரத்தில் காணப்பட்டது.

தற்போது விஷேட அதிரடிப்படையினருக்கு எதிராக மர்மச் சடலங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் விசாரணைகளை திசைதிருப்பும் நோக்கில் இந்தச்சடலம் இங்கு வீசப்பட்டிருக்கலாமென பொலிஸார் கருதுகின்றனராம். -சி

## தமிழக கரையோரத்தில் புலிகள் நடமாட்டமில்லை!

(கொழும்பு)

தமிழகத்தில் கடலோர கிராமங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக மத்திய அமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தமை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் என தமிழக அமைச்சர் எஸ், கண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் கூறுகையில் : தமிழகத்தில் புலிகளின் நடமாட்டத்தை ஒடுக்குவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுத்திருப்பதாக மத்திய உள்துறை இணையமைச்சர் திரு. ராஜேஸ் பைலட் கூறியுள்ளார். இந்நிலையில் அமைச்சர் சிதம்பரத்தின் குற்றச்சாட்டில் ஆதாரமில்லை.

கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு கடந்த நாலு வருடங்களாக தமிழக அரசு கடும்நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்காகமத்திய அரசு வேறு உதவிகளை வழங்க முன்வந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளார். சி

## போட்டி

(நல்லூர்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமையகத்தின் நிர்வாகிகளுக்கான தேர்தல் ஐப்பசி மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் யாழ். கிளையின் செயலாளர், பேராசிரியர் வீ.கே. கணேசலிங்கம் உபதலைவர் பதவிக்கு போட்டியிடவுள்ளார். கிளையின் நிர்வாகக் குழு அவரது பெயரை சிபார்சு செய்து கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது -72 சி

## செயற்கை கண், கால் உற்பத்தி

(சென்னை)

எதிர்காலத்தில் செயற்கை கண்கள் செயற்கை கால்கள் இருதயங்கள் மற்றும் உடலுறுப்பை தயாரிக்க முடியும் என அமெரிக்காவில் வேல் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நரம்பியல்துறை விஞ்ஞானியான தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் நரேந்திரா கூறியுள்ளார்,

அண்ணாமலை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் அடுத்த நூற்றுண்டின் தொடக்கத்தில் தொழில் நுட்ப அபிவிருத்தியில் எல்லாப் பிரிவுகளிலும் கணிப்பொறிகள் முக்கிய இடத்தை வகிக்கும்

புதிய தொழில் நுட்பங்களின் வளர்ச்சிக்கு கணிப்பொறி ஒரு சாதகமாக இருக்கும். வியாதிகளை குணப்படுத்துவதிலும் புதிய தொழில் நுட்பங்கள் புகுத்தப்படும் எனவும் தெரிவித்தார் சி

## நோயாளர் அதிகரிப்பு

(பண்டத்தரிப்பு)

ஆனைக்கோட்டை சந்திக்கு அருகாமையில் தற்போது இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கிவரும் சங்கானை அரசினர் வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெறவரும் நோயாளர் தொகை மிகவும் அதிகரித்துள்ளது.

கடந்த சில தினங்களாக தினமும் 250 பேருக்குமேல் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். பற்சிகிச்சை பிரிவும் இங்கு செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 72



### அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு பரிசு பெற்ற இலக்கங்கள்

வட்டுகோட்டை விளையாட்டுக் கழகத்தால் 3-9-95 ஞாயிற்றுக்கிழமையன்று நடாத்தப் பட்ட அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்களின் விபரம் வருமாறு:-

1-ம் பரிசு 6763
2-ம் பரிசு 5667
3-ம் பரிசு 1456

ஆறுதல் பரிசு இல:-

6904 3249
408 621
2050 5016

தலைவர்
வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழகம்
(ஏ-1651)

## ★ பேராதனை வளாகத்தில்
# ராக்கிங்கில் ஈடுபட்ட 7 மாணவர் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கம்
## 7 பேருக்கு 3 வருட தடை

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ராக்கிங்கில் ஈடுபட்ட 7 மாணவர்கள் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப்பட்டதுடன், மேலும் 7 மாணவர்கள் 3 வருடம் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப் பல்கலைக்கழகத்திற்குப் புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களை மோசமான முறையில் 'ராக்கிங்' செய்தமைக்காகவே, மேற்படி 14 சிரேஷ்ட மாணவர்களும் இவ்வாறு கடுமையாகப் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் சேர்ந்து ராக்கிங்கில் ஈடுபட்ட மேலும் 20க்கும் மேற்பட்ட மாணவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு, இறுதிச் சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளதாகப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அண்மைக் காலமாக ராக்கிங் அதிகரித்துக் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. -சி

## பாணின் விலையை அரசு 7 ரூபாவாக உயர்த்தும்

(கொழும்பு)

அரசு விரைவில் பாணின் விலையை ஏழு ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாணிற்குத் தற்போது வழங்கி வரும் மானியத்தை நீக்குவதன் மூலம் தற்போது 3 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படும் பாணின் விலையினை ஏழு ரூபாவாக அதிகரிக்கவுள்ளது.

பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும் அரசு பாணின் விலையை அதிகரிப்பதை தவிர வேறு வழியின்றி தவிக்கிறது. இதே போன்றே வேறு பல பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்படவுள்ளனவாம். -சி

## விஷேட அதிரடிப்படை கலைக்கப்படமாட்டாது

(கொழும்பு)

விஷேட அதிரடிப் படையைக் கலைக்கும் திட்டம் அரசுக்கு இல்லை. எனினும் இப் படைப் பிரிவு முற்றாக மறுசீரமைக்கப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் டபிள்யு ராஜகுரு தெரிவித்துள்ளார்.

விஷேட அதிரடிப் படைப் பிரிவைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் குழுவொன்று கொழும்பில் மர்மச் சடலங்களின் சூத்திரதாரியாக இருந்ததையடுத்து அப்படை பிரிவு மீது மக்களுக்கு பெரும் சந்தேகம் ஏற்பட்டுள்ளதை அடுத்தே இப்படைப் பிரிவு உடனடியாக மறுசீரமைப்புச் செய்யப்படவுள்ளதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

விஷேட அதிரடிப் படை கலைக்கப்படலாமென எழுந்த வதந்திகளை நிராகரித்த பொலிஸ் மா அதிபர் இப் படைப் பிரிவைச் சேர்ந்த வேறு பலருக்கும் இந்த மர்மச் சடலங்களின் கொலையுடன் தொடர்பிருக்கலாம் என்பதை மறுக்கவில்லை. ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமையவே இந்த மறுசீரமைப்பு நடைபெறவுள்ளதாக பொலிஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. -சி

# இலங்கை வங்கிக் கட்டிடத்தை தகர்க்க முயன்ற தமிழர் கைது

(கொழும்பு)

கொழும்பிலுள்ள இலங்கை வங்கிக் கட்டிடத்தை குண்டு வைத்து தகர்க்க முற்பட்டதாக தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை வங்கியின் பல மாடிக் கட்டிடத்தை தகர்க்கும் நோக்கில் இந்த நபர் அந்தப் பகுதியில் நடமாடியதாகவும் இவர் தகுந்த நேரத்தில் படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவரிடமிருந்து முக்கிய ஆவணங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் இதையடுத்து பல மாடிகளைக்கொண்ட இலங்கை வங்கி கட்டிடத்தின் பாதுகாப்பு பெருமளவில் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வாரம் கொழும்பிலுள்ள உலக வர்த்தகமைய கட்டிடத்திற்கு அருகில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவர் அக் கட்டிடத்தை குண்டு வைத்து தகர்க்க முற்பட்டதாக கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே. -சி

## தீவிரவாதத்தை ஒழிக்க படை நடவடிக்கை தீவிரமாகும்

(கொழும்பு)

தீவிரவாதத்தை ஒழித்துக் கட்டும் நோக்கில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும் என அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கூறுகையில்: நாட்டை பிரிக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை. அதிகாரத்தை பரவலாக்குவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

இராணுவ நடவடிக்கைக்கு பெருமளவு பணம் தேவைப்படுகிறது. ஆயுதக் கொள்வனவிற்காக அரசு பல நாடுகளுடன் தொடர்பு கொண்டுள்ளது. இவை விரைவில் வந்து சேருமென நம்புவதாகவும் தெரிவித்தார். -கே-சி

## பொம்மர், ஹெலி நோட்டம்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் மேற்குப் பகுதியான பொன்னாலை. மூளாய், தொல்புரம் முதலான இடங்களைச் சுற்றி கடந்த ஞாயிறு இரவு பொம்மரும், ஹெலியும் நோட்டமிட்டுச் சென்றுள்ளன.

இதையடுத்துமக்கள் பீதியடைந்தபோதும் எவரும் இடம் பெயரவில்லை. 139-சி

## இசைக் கல்லூரிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(கொழும்புத்துறை)

மட்டக்களப்பு விபுலானந்தா இசைக் கல்லூரி 1996ம் ஆண்டிற்கான விண்ணப்பத்தினைக் கோரியுள்ளது.

இவ் விண்ணப்பம் 18 வயது தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தோரும். வட இலங்கை சங்கீதசபை பரீட்சையில் சித்தியடைந்தோரும் எதிர்வரும் 15ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் விண்ணப்பிக்குமாறு இந்துசமய இந்து கலாசாரத் திணைக்களம் அறிவித்துள்ளது. 154

## நாட்டை எட்டாக பிரிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை

(கொழும்பு)

"எட்டுப் பிரிவுகளாக நாட்டை பிரிக்கும் எண்ணம் அரசாங்கத்திற்கு ஒரு போதும் இருந்ததில்லை.

இவ்வாறு நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் அரசாங்க சேவை பொறியியலாளர் சங்க வருடாந்த கூட்டத்தில் நேற்று உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயத்தில் அறிவிக்கப்பட்ட அதிகார பரவலாக்கல் பிரேரணைகளில் குறிப்பிடப்பட்ட பிராந்திய பொலிஸ் நிலையங்கள், காணி சம்பந்தமான விதப்புரைகள், பிராந்திய நீதிமன்றம் அரசாங்க சேவை கழகங்கள் சம்பந்தமாக குறிப்பிட்ட சில பிரிவினரால் தெரிவிக்கப்பட்ட தகவல்கள் இத்தகைய பிரேரணைகளை தவறாக புரிந்து கொண்டதன் விளைவாகும் எனவும் கூறினார். கே-சி

நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த

'வேரும் விழுதுகளும்'

கல்வியியற் கண்காட்சி

இடம்: நுணுவில் கண்ணகை அம்மன் கோவிலடி

நிகழ்வு நேரம்: காலை 8-30 மணிக்கு ஆரம்பமாகிறது

உள் அனுமதிக்கப்படும் இறுதி நேரம் மாலை 5-30 மணி

எங்களைத் தேடி... செல்வோமா?

செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்

(சி-5259)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence number B/1683618.

## ★ புலிகளுடன் அரசு பேசும் என்ற
# அமெரிக்க அரசின் கூற்றை இலங்கை அரசு நிராகரித்தது

(கொழும்பு)

இலங்கை அரசு, மிக விரைவில் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அமெரிக்க அரசு கூறியிருப்பதை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக, யாழ்குடாவில் மிக விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ள இச்சூழலில், விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுக்களை ஆரம்பிக்காது என இலங்கை வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இனப் பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணப்படவேண்டும் என வற்புறுத்திவரும் அமெரிக்க அரசு தனக்குக் கிடைத்த தகவலின்படி, விரைவில் இலங்கை அரசு புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உள்ளதாகக் கூறியுள்ளது.

அமெரிக்காவின் இந்தக் கூற்றையே இலங்கை அரசு நிராகரித்துள்ளதுடன், தற்போதைய சூழ்நிலையில் புலிகளுடன் பேச்சுக்கள் நடைபெற மாட்டாது எனவும் கூறியுள்ளது. -சி

### ஜரிஸ் மோனா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கப்பலில் இருந்த 136 பேரும் கப்பல் மாலுமிகளிடமிருந்து பிரிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் வெவ்வேறு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தது. கே-சி

### இராணுவ

(1ம் பக்க தொடர்ச்சி)

அதிரடிப் பொலிஸ் ஒருவரும், சாதாரண இராணுவச் சிப்பாய் ஒருவரும் பலியானதுடன் 16 படையினர் படுகாயமடைந்தனர்.

விமானத்தளத்தின் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுக்கொண்டிருந்த வேளையில் சீனத் தயாரிப்பு விமானம் ஒன்று பாதுகாப்பாக தரை இறங்கியதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது. வி-சி

### பலாலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏழாலை, மயிலங்காடு, சூராவத்தை, சுன்னாகம், கந்தரோடை பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்துள்ளன.

மயிலங்காட்டில் வீழ்ந்து வெடித்த ஷெல்லுக்கு மாகலிங்கம் ஜெயசீலன் [வயது 16] திருச்செந்தூரன் முரளீஸ்வரன் [வயது 17], ஆகிய இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

ஏழாலையில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் கார்த்திகேசு தங்கம்மா [வயது 60] கந்தையா வடிவேலு [வயது 60] ஆகிய இரு வயோதிபர்கள் படுகாயமடைந்தனர். படுகாயமடைந்த நால்வரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் ஷெல் தாக்குதல் பற்றி படுகாயமடைந்த மயிலங்காடு சூராவத்தையை சேர்ந்த தி. முரளீஸ்வரன் தெரிவிக்கையில்; பலாலி பகுதியிலிருந்து கூவிக்கொண்டுவந்த பல ஷெல்கள் எமக்கு முன்னால் வீழ்ந்து வெடித்தன. இதனால் எமக்கு என்ன நடந்தது என்பது பற்றி உடனே தெரியவில்லை. சிறிது நேரம் கழித்து நிமிர்ந்து பார்த்தபோது இரத்த வெள்ளத்தில் நானும் எனது நண்பனும் கிடந்தோம். எம்மை காப்பாற்றுவதற்கு எவருமே இல்லை. வீதியே வெறிச்சோடிக் கிடந்தது ஒருவாறு நானும் எனது நண்பன் ஜெயசீலனும் முதலுதவி சிகிச்சை வகுப்பில் கிடைத்த அனுபவத்தால் சேட்டுகளை கழற்றி இரத்தம் வடியாத வண்ணம் முதலுதவி சிகிச்சையை மேற்கொண்டதாக தெரிவித்தார். 170- சி

### முத்திரை தட்டுப்பாடு

(திருநெல்வேலி)

யாழ். மாவட்டத்தில் முத்திரைத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பரீட்சைகள் தொழிலுக்கு விண்ணப்பிப்பவர்கள் பலர் பாதிப்படைந்துள்ளனர். 157